Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ATHOOR

**C.C.No.10/2021**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | ஜாதி | : |
| த/பெ | : சித்ரவேல் | தொழில் | : வனச்சரக அலுவலர் (ஓய்வு), கன்னிவாடி |
| கிராமம் | :மதுரை | சமயம் | : |
| தாலுகா | : ஆத்தூர் | வயது | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2023.

(Accused A1, A2, A4 and A5 Present, A3 died)

முதல் விசாரணை

நான் கன்னிவாடி வனச்சரக அலுவலராக பணியாற்றி வந்து 30.11.2016 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். மேற்கண்ட கன்னிவாடி வனச்சரகத்தில் பணியாற்றியபோது கடந்த 17.06.2016 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் எனது சரக சிப்பந்திகளுடன் செம்பட்டி வத்தலகுண்டு பிரதான சாலையில் ரோந்து பணி மேற்கண்ட போது சாலை புதுார் என்ற ஊரில் சந்தியா உணவகம் அருகில் TN 20 AD 9365 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற Bolero Jeep ஒன்று சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்தது அருகில் சென்று அந்த வாகத்தை சோதனை செய்த போது 5 நபர்கள் இருந்தார்கள் அவர்களிடம் பதப்படுத்தப்பட்ட புலித்தோல் ஒன்று இருந்தது. அந்த இடம் மிகவும் நெருக்கடியான இடமாக இருந்ததால் மேற்கண்ட வாகனத்துடன் மேற்கண்ட 5 நபர்களையும் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டதில் அவர்கள் அந்த புலித்தோலை வேறு நபர்களுக்கு விற்பனை செய்வதற்காக அந்த இடத்தில் காத்திருந்தது தெரியவந்தது. அவர்களிடம் இருந்த Bolero Jeep, Bajaj CT 100 மோட்டார் சைக்கிள் பதிவு எண் TN 22 AK 3130. புலித்தோல் மற்றும் 6 செல்போன்கள், ஆதார் அட்டை, பான் அட்டை, 3 கைகடிகாரங்களை H நமுனா வில் கைப்பற்றி அவர்களிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி 1972 ம் வருட வன உயிரின பாதுகாப்பு சட்டபிரிவு 40(1)(2) மற்றும் 2(ஏ), 44(1), 49(ஏ), 49(பி)ன் படி 5 நபர்களையும் கைது செய்து மறு நாள் 18.06.2016 அன்று திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.2ல் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 18.06.2016 அன்று திண்டுக்கல் நீதித்துறை நடுவர்

எண்.2ல் ஒப்படைக்கப்பட்டு வனச்சரக அலுவலக வசம் பெறப்பட்டது. பின்பு இவ்வழக்கை விசாரணை செய்து வந்த நான் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் எனக்கு பின்னால் பணியில் அமர்ந்த வனச்சரகர் தெய்வசர்மா என்பவர் வழக்கின் விசாரணை முடித்து ஏ நமுனா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கு சான்று ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor